(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 423.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 நவெம்பர் 21, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3560/ '13

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான துறைசார் நிபுணர், ஆலோசகர் அல்லது இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில் / அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கத்தையும்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்கு ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே(அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4405/ '13

2.

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் ஒக்றோபர் வரையான காலப்பகுதியில் இலங்கையில் மனைசார்ந்த தேங்காய் நுகர்வு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறித்த காலப்பகுதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தேங்காய் சார்ந்த உற்பத்திகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வோர் உற்பத்தியிலிருந்தும் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது தேங்காய்த் தண்ணீரின் வடிவத்திலா இன்றேல் தேங்காய் தண்ணீர் சார்ந்த உற்பத்தியாகவா என்பதையும்;

(iii) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஏற்றுமதிகளின் அளவு யாதென்பதையும்;

(v) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கையில் தேங்காய் உற்பத்தியை ஆரம்பிக்கும் ஒருவருக்கு அரசாங்கத்தால் வழங்க முடியுமான நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக உற்பத்தியாளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5203/ '14

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் சார்பில் நட்டஈடு செலுத்தும் போது மேற்படி காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை யாது என்பதையும்;

(ii) இதன் போது, ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின், பன்னிபிட்டிய, சுஹத மாவத்தை, ஹிரிபிட்டிய, 137 ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற திருமதி கால்லகே ரங்சி காந்திக்கு குறித்த நட்டஈடு செலுத்துதல் மேற்படி அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) இவரின் காணியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட அளவு மற்றும் அதற்காகச் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5416/ '14

4.

கௌரவ அஜித் குமார,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தனியார் துறையினராலும் அரசாங்கத்தினாலும் பேணிவரப்படுகின்ற வாகனத் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை

என்பதை உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க காணிகளை வாகனத் தரிப்பு நிலையங்களைப் பேணிவருவதற்காக தனியார் துறையினருக்கு பெற்றுக்கொடுக்கின்ற முறையியல் யாது;

(ii) 2011 – 2013 ஆண்டு வரை அவ்விதமாக குத்தகைக்கு விட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானம் யாது;

(iii) அந்த வாகனத் தரிப்பு நிலையங்களில் ஒவ்வொரு வாகன வகைக்கும் ஏற்ப அறவிடப்படுகின்ற கட்டணங்கள் யாவை;

(iv) கட்டணம் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

(v) அந்த அளவுகோல்கள் தயாரிக்கப்பட்ட முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாகனத் தரிப்பு நிலையங்களைப் பராமரிக்கின்ற நிறுவனம் மற்றும் ஏற்புடைய செலவுத் தலைப்பு யாது;

(ii) வாகனத் தரிப்பு நிலையங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களை அவற்றைப் பொறுப்பெற்றுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுத் தீர்த்துக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அரசாங்க காணிகளை தனியார் துறையினருக்கு கையளிப்பதற்கான நோக்கங்கள் யாவை;

(ii) அரசாங்கம் வாகனத் தரிப்பு நிலையங்களைப் பேணிவரும் பொறுப்பினை ஏற்காதிருப்பது ஏன்;

(iii) அரசாங்கத்தினால் பொது வாகனத் தரிப்பு நியைங்களைப் பேணிவருவதற்கான எதிர்காலத் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5426/ '14

5.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் நிறுவனக் கட்டமைப்பு யாது என்பதையும்;

(ii) இது அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனமொன்றா அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான கம்பனியொன்றா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி களஞ்சியத் தொகுதி அரசாங்கத்திற்கு உரித்தான தனியார் நிறுவனமொன்றாக இயங்கி வருகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 யூன் மாதம் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதிக்கு கொண்டுவரப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி எண்ணெய்யை இந்நாட்டுக்குக் கொண்டுவருவதில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய்யை கொண்டுவருவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iv) மேற்படி எண்ணெய்யைக் கையேற்கும்போது அதன் தரம் பரிசோதிக்கப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி தரப் பரிசோதனையின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5442/ '14

6.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலைகளினதும் மாகாணசபை பாடசாலைகளினதும் கட்டடங்களையும் விளையாட்டு மைதானங்களையும் வேறு வெளி வேலைகளுக்காக வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தகைய சுற்றிக்கையொன்று இல்லையெனில், அவ்வாறு செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ள மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அல்லது பாடசாலை அதிபர்கள் உள்ளனரா என்பதையும்;

(iv) எதேனும் வெளி வேலைகளுக்காக ஏதேனுமொரு பாடசாலை அல்லது அதன் ஒரு பகுதி வழங்கப்பட்டிருப்பின், அவ்வாறு வழங்கும் உரிமையைக்கொண்ட நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5598/ '14

7.

கௌரவ பாலித தெவரப்பெரும,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக பாதையில் தொடங்கொட பிரவேச நிலையத்திலிருந்து மதுகம களுத்துறை பிரதான வீதிக்கு பிரவேசித்ததன் பின்னர் மத்துகமயை நோக்கிய சுமார் 50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தனியார் காணியொன்றில் நீண்டகாலமாக வீதிக்கு இடையூறான விதத்தில் மண்திடலொன்று உள்ளதென்பதையும்,

(ii) இந்த மண்திடல் வீதியில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறாக உள்ளதென்பதையும்;

(iii) இந்த மண் திடல் காரணமாக இவ்விடத்தில் வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதிக்கு இடையூறாகவுள்ள இந்த மண் திடலை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில் அத் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2014.10.31 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான இன்றைய தினம், சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் மற்றும் பி.ப 1.00 மணி முதல் பி.ப 8.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 8.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட இருபத்தி மூன்றாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவெம்பர் 20).

* 2.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 13 ஆம் திகதிய 1875/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

4.

மடஹபொல ஶ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

5.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

8.

சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

9.

இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப் பணியாளர்களின் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/44 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கங்கள் 968, 969, 970, 971 மற்றும் 972)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2014 ஒற்றோபர் 24 ஆந் திகதிய 1885/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் பந்தி (2) இன் உடனும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 11 ஆம் திகதிய 1875/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 14 ஆம் திகதிய 1875/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 22 ஆம் திகதிய 1876/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 04 ஆந் திகதிய 1878/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய1885/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய 1885/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் அந்தச் சட்டத்தின் 6 ஆம் பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய 1882/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 02 ஆம் திகதிய 1882/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய 1883/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 26.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 27.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 28.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 29.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 30.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 31.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 32.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 33.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 34.

வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

35.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

38.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

39.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

40.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.